## நிரந்தரத் தீர்வு ஏற்படுத்தும் வகையில்

# திருச்செந்தூர் கடல் அரிப்பினைத் தடுத்திட வல்லுநர்கள் ஆய்வுக் கூட்டம்!

## கனிமொழி கருணாநிதி எம்.பி. – அமைச்சர்கள் அனிதா ராதாகிருஷ்ணன் – பி.கே.சேகர்பாபு பங்கேற்பு!

தூத்துக்குடி, ஜன.28-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, மீன்வளம் மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி ஆகியோர் தலைமையில் (25.01.2025) அன்று இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் அலுவலகத்தில் திருச்செந்தூர், அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் கடற்கரை பகுதியில் கடல் அரிப்பினால் பாதிக்கப்பட்ட பகுதிகளை சீரமைத்தல் தொடர்பான வல்லுநர்களின் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

**பின்னர், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-**

திருச்செந்தூரில் ஏற்பட்ட கடல் அரிப்பிற்கு நிரந்தர தீர்வு காணும் வகையில் துறை சார்ந்த வல்லுநர்களை அழைத்து ஆய்வு செய்து, மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகளை துரிதமாக செயல்படுத்திட தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார். அதனடிப்படையில் கடந்த 18.01.2025 அன்று மீன்வளம் மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர், தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் அவர்களும், நானும் திருச்செந்தூருக்கு நேரில் சென்று கடல் அரிப்பினால் பாதிக்கப்பட்ட பகுதிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தபோது, துறை சார்ந்த வல்லுநர்களிடம் நிரந்தர தீர்வு ஏற்படுத்துவது குறித்து அறிக்கை கோரியிருந்தோம்.

அதனைத் தொடர்ந்து, இன்றைய தினம் மீன்வளம் மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர், மதிப்பிற்குரிய தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் ஆகியோர் தலைமையில் சென்னை இந்திய தொழில்நுட்ப நிறுவனம் (IIT, Madras), கடலோர ஆராய்ச்சிக்கான தேசிய மையம் (NCCR), தேசிய கடல்சார் தொழில்நுட்ப நிறுவனம் (NIOT), தமிழ்நாடு மீன்வளத் துறை (TN Fisheries Dept.) மற்றும் நபார்டு (NABARD) ஆகியவற்றை சேர்ந்த பேராசிரியர்கள் மற்றும் வல்லுநர்களின் ஆய்வு கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் திருச்செந்தூரில் கடல் அரிப்பை தடுத்திடும் வகையில் நிரந்தர தீர்வு காண மாநில மற்றும் ஒன்றிய அரசின் துறை சார்ந்த பேராசிரியர்கள், அறிவியலாளர்கள் மற்றும் பொறியாளர்களும், ஒய்வுபெற்ற ஐஐடி பேராசிரியர் சுந்தர வடிவேல் அவர்கள் காணொலிக் காட்சி வாயிலாகவும் ஆலோசனைகளை தெரிவித்ததோடு, அறிக்கைகளையும் அளித்தனர். அதில் 3 குழுவினரின் அறிக்கை ஒரேவிதமாகவும், இரண்டு குழுவினரின் அறிக்கை வேறுவிதமாகவும் இருந்தது. இந்த ஐந்து குழுவினருடன் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் அவர்களும், மீன்வளத்துறை ஆணையர் அவர்களும் மீண்டும் கூட்டம் நடத்தி, ஒருங்கிணைந்து நிரந்தர தீர்வு ஏற்படுத்துவதற்கான அறிக்கையினை இரண்டு நாட்களில் இறுதி செய்த பின்னர், அதனை முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று அனுமதி பெற்று, கடல் அரிப்பினை தடுப்பதற்கான பணிகளுக்கு ஒப்பந்தம் கோரப்பட்டு, உடனடியாக பணிகள் தொடங்குவதற்குண்டான நடவடிக்கைகளை மேற்கொள்ள உள்ளோம். இது திருச்செந்தூர் திருக்கோயிலுக்கு வருகின்ற பக்தர்கள் கடலில் கால் நனைத்தல் மற்றும் நீராடுதல் போன்ற இறை வழிபாட்டிற்கு உண்டான வழிமுறைகளும் எந்த வகையிலும் பாதிக்கப்படாத அளவிற்கு இருக்கும்.

திருச்செந்தூர் திருக்கோயிலின் பாதுகாப்பு கருதி, 19 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பணியை மேற்கொள்ள எத்துறைக்கு டெபாசிட் செய்து, 6 மாதங்களுக்கு முன்பே பணிகள் தொடங்கப்பட்டு அந்த பணியானது 65 சதவீதம் நிறைவு பெற்றுள்ளது. தற்போது கடலரிப்பை தடுக்க தனியாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதனால் மீனவர்களுக்கு எந்த வகையிலும் பாதிப்பில்லை. இப்பணிகளில் அனிதா ராதாகிருஷ்ணன் அவர்கள் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் என்ற வகையிலும், மீன்வளத்துறை அமைச்சர் என்ற வகையிலும் அதிக கவனம் செலுத்தி வருகின்றார்.

திராவிட மாடல் ஆட்சி ஏற்பட்டப் பிறகு திருக்கோயில்களுக்கு வருகை தரும் பக்தர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் உயர்ந்து கொண்டே வருகிறது. கடந்த ஆட்சியின் பத்து ஆண்டுகளை ஒப்பிட்டு பார்க்கும் போது இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு 100 சதவீதம் திருக்கோயில்களுக்கு பக்தர்களின் வருகை உயர்ந்திருக்கிறது. ஒரு காலத்தில் நாம் தான் அண்டை மாநிலங்களிலுள்ள திருக்கோயில்களுக்கு சென்று நேர்த்திக் கடன் செலுத்தி கொண்டிருந்த நிலை மாறி, இன்றைக்கு தமிழகத்தை நோக்கி அண்டை மாநிலத்தவரும் அதிகளவிற்கு இறைவனை தரிசனம் செய்வதற்கு வருகை தருகின்றார்கள். குறிப்பாக திருச்செந்தூர், பழனி, திருவண்ணாமலை, திருத்தணி ஆகிய திருக்கோயில்களுக்கு ஆந்திரா, தெலுங்கானா, கேரளா மற்றும் கர்நாடகாவிலிருந்து அதிக எண்ணிக்கையில் பக்தர்கள் வருகை தருகின்றனர். இப்படி அதிகரித்து வரும் பக்தர்களின் அடிப்படை தேவைகளை நிறைவேற்றுகின்ற வகையில் பல்வேறு கட்டமைப்புகளையும், வசதிகளையும் உருவாக்கி வருகின்றோம்.

முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு பெருந்திட்ட வரைவின்கீழ் (Master Plan), ரூ.1,770 கோடி மதிப்பீட்டில் 19 திருக்கோயில்களில் பக்தர்களுக்கான அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன. அதில் ஒரு பகுதியாக திருச்செந்தூர் திருக்கோயில் பணியும் நடைபெற்று வருவதோடு, அத்திருக்கோயிலுக்கு வருகின்ற ஜுலை 7 அன்று குடமுழுக்கு நடத்திடும் வகையில்9 திட்டமிடலோடு பணியாற்றி வருகிறோம். திருக்கோயில்கள் தொடர்பாக ஏதேனும் குறைபாடுகள் ஊடகங்களில் வெளிவந்தால் முதலமைச்சர் அவர்கள் உடனடியாக அதனை களைவதற்கு தேவையான நடவடிக்கைகளை முழு வீச்சில் எடுத்திட வேண்டுமென தொடர்ந்து அறிவுறுத்தி வருகின்றார். ஆகவே எந்த காலத்திலும் இல்லாத அளவிற்கு திருக்கோயில்களின் மேம்பாட்டிற்கும், பக்தர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை உருவாக்கி தருவதற்கும் தொடர்ந்து முழு வேகத்தோடு செயல்படுவோம்.

இந்த ஆட்சியைப் பொறுத்தளவில் எல்லோருக்கும் எல்லாம் என்பதே தாரக மந்திரமாகும். இங்கு ஏழை, பணக்காரன் என்ற பாகுபாடே கிடையாது. திருக்கோயில்களில் அனைவருக்கும் கட்டணமில்லா தரிசனம் தான் எங்களின் நோக்கம். திருக்கோயில்களில் இடைத்தரகர்கள் எவரும் அனுமதிக்கப்படுவதில்லை.

கேரள முதலமைச்சர் அவர்களை நானும், துறையின் செயலர் அவர்களும் சென்னை விமான நிலையத்தில் சந்தித்த போது, சபரிமலையில் ரோப்கார் திட்டத்தை செயல்படுத்த உள்ளதாக தெரிவித்தார். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, தமிழ்நாட்டிலிருந்து சபரிமலைக்கு செல்லும் ஐயப்ப பக்தர்களுக்கு தங்கும் வசதியை ஏற்படுத்தித் தரும் வகையில் இடத்தை ஒதுக்கீடு செய்து தந்திட வேண்டுமென கோரினோம். இது குறித்து முறையாக பரிசீலித்து நடவடிக்கை எடுப்பதாக கேரள முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

அவரவர் விரும்புகின்ற வழிபாட்டில் எந்த விதமான இடையூறும் வரக்கூடாது என்பது முதலமைச்சர் அவர்களின் உத்தரவாகும். இனத்தால், மதத்தால், மொழியால் தமிழகம் பிளவு படக்கூடாது என்பதுதான் திராவிட மாடல் ஆட்சியின் கொள்கையாகும். திருப்பரங்குன்றம் நிகழ்வில் எந்த விதமான சலசலப்பு ஏற்படாமல் இருப்பதற்கு அரசும், துறையும் கவனம் செலுத்திக் கொண்டிருக்கின்றது. ஒரு சில மதவாத சக்திகள் அதை ஊதி பெரிதாக்க முயற்சித்துக் கொண்டிருக்கிறார்கள். மதத்தால், மொழியால், இனத்தால் மக்களை பிளவு படுத்தாதீர்கள். அனைவரும் ஒன்றாக செல்வோம், ஒன்றாகசைகோர்த்து நிற்போம். எல்லோருக்கும் எல்லாம் என்ற திராவிட மாடல் அரசின் கொள்கையோடு வளர்ச்சி பணிகளை நோக்கி செல்வதற்கு எவ்வித இடையூறுகளையும் ஏற்படுத்தாதீர்கள் என்பதுதான் எனது தாழ்மையான வேண்டுகோளாகும் என்று தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி.சந்திரமோகன், ஆணையர் பி.என்.ஸ்ரீதர், கூடுதல் ஆணையர் டாக்டர் இரா.சுகுமார், சென்னை இந்திய தொழில்நுட்ப கழகத்தின் பெருங்கடல் பொறியியல் துறை பேராசிரியர் எஸ்.ஏ.சன்னாசிராஜ், கடலோர ஆராய்ச்சிக்கான தேசிய மையத்தின் இயக்குநரும், அறிவியலாளருமான டாக்டர் எம்.வி.இராமமூர்த்தி மற்றும் அறிவியலாளர் டாக்டர்வி.இராமநாதன், தேசிய கடல்சார் தொழில்நுட்ப நிறுவனத்தின் குழுத் தலைவர் மற்றும் அறிவியலாளர் டாக்டர் விஜயா ரவிச்சந்திரன், நபார்டு நிறுவனத்தின் பொறியியல் ஆலோசகர் ஷெல்வின் சௌந்தரராஜன், தலைமைப் பொறியாளர்கள் பொ.பெரியசாமி, திருமதி ஜெயக்குமாரி, இந்து சமய அறநிலையத்துறை மற்றும் மீன்வளத்துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் ஏற்பாட்டில்

# சிங்கம்புணரியில் அண்ணா மன்றம் - கலைஞர் அறிவாலயம் கட்டிட துவக்க விழா!

## ராமஅருணகிரி – கணேசன் – பூமிநாதன் – கழகத்தினர் பங்கேற்பு!

சிவகங்கை, ஜன. 28 -

முத்தமிழ் அறிஞர் கலைஞர் வழியில் தமிழ்நாட்டின் பாசத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி அவர்களின் வாழ்த்துக்களோடு கூட்டுறவுத்துறை அமைச்சர் பெரியகருப்பன் அவர்களின் பரிந்துரையின் படி சிங்கம்புணரியில் அண்ணா மன்றம், கலைஞர் அறிவாலயம் கட்டிட துவக்க விழா. மாவட்டச் செயலாளர் - கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர். பெரிய கருப்பன் ஏற்பாட்டில் நடைபெற்றது.

சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரியில் கடந்த 50 ஆண்டுகளுக்கு முன்பு சிங்கம்புணரி பகுதியில் முன்னாள் சட்ட அமைச்சர் மாதவன் அவர்களால் தி.மு.க. ஆட்சி காலத்தில் சிங்கம்புணரி பகுதிக்கு பல்வேறு திட்ட பணிகள் கொண்டுவரப்பட்டு அதை இன்றும் மக்களால் போற்றப்பட்டு வருகிறது. முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் ஆட்சிக் காலத்தில் 9 அமைச்சர்களில் ஒரு அமைச்சராக அங்கம் வகித்து முன்னாள் சட்ட அமைச்சர் மாதவன் அவர்களால் சிங்கம்புணரி பகுதியில் அரசு வட்டார அரசு மருத்துவமனை அரசு பெண்கள் ஆண்கள் இரு பாலர்களுக்கான தனித் தனி மேல்நிலைப் பள்ளிகள், பல ஆயிரம் தொழிலாளர்கள் பணிபுரியக்கூடிய தொழிற்சாலைகள்,இரு மலர்களே மலைகளைக் குடைந்து புதூருக்கு சாலை அமைத்து என முத்தமிழ் அறிஞர் கலைஞர் ஆட்சிக் காலத்தில் மாதவன் அவர்களால் பல்வேறு திட்ட பணிகள் நடைபெற்று உள்ளது.

அந்த வரிசையில் கழக தளபதி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சிறப்பான ஆட்சியில் சிங்கம்புணரியை சீர்மிகு சிங்கம்புணரியாக மாற்றியமைத்து தந்ததிராவிட முன்னேற்றக் கழகத்தின் மாவட்டச் செயலாளர்- திருப்பத்தூர் தொகுதியின் சட்ட மன்ற உறுப்பினர் - அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தனது தொகுதி மட்டுமல்லாமல் மாவட்டம் முழுவதும் மக்களின் அடிப்படை தேவைகளை உணர்ந்து அதை தமிழக முதல் அமைச்சருக்கு கொண்டு சென்று மக்களின் தேவைகளை பூர்த்தி செய்து வருகிறார்.

கூட்டுறவுத்துறையில் கூட்டுறவே நாட்டு உயர்வு என்பதற்கே அந்த துறையிலும் அமைச்சர் பல்வேறு சாதனைகளை படைத்து வருகிறார். மிகவும் பின்தங்கிய துறையாக இருந்த இத்துறையை தற்போது உயர்த்திக் காட்டி சிவகங்கை மாவட்டத்திற்கும் சிங்கம்புணரிக்கும் பெருமை சேர்த்து வருகின்றார்.

குறிப்பாக 1974 களில் முன்னாள் சட்ட அமைச்சர் மாதவன் அவர்களின் சீரிய முயற்சியால் சிங்கம்புணரி பேருந்து நிலையம் அருகில் திண்டுக்கல் சாலை சுந்தரம் நகர் ஆர்ச் எதிரே சுமார் பத்து சென்ட் பரப்பளவில் கட்டடம் கட்டப்பட்டு அண்ணா மன்றம் என பெயர் சூட்டி தி.மு.க. கட்சி அலுவலகம் செயல்பட்டது. சுமார் 50 ஆண்டுகளுக்கு பிறகு மீண்டும் அதே இடத்தில் பழைய கட்டிடத்தை இடித்து விட்டு புதிய கட்டிடம் கட்டக் கழகத் தலைவர் தளபதி அவர்களின் வாழ்த்துக்களுடன் கூட்டுறவுத்துறை அமைச்சர் பெரியகருப்பன் சீரிய முயற்சியால் அங்கு இருந்த பழைய கட்டிடத்தை இடித்து விட்டு புத்தம் புதியதாக பிரம்மாண்டமான முறையில் இரண்டு அடுக்குகள் கொண்டு அதிநவீனத்துடன்5000 சதுர அடியில் புதிய கட்டிடம் கட்டப்படஏற்பாடு செய்யப்பட்டது. கூட்டுறவு துறை அமைச்சர் பெரியகருப்பன் அவர்களின் வழிகாட்டுதலின்படி அதன் கட்டிட துவக்க விழா நேற்று நடைபெற்றது. விழாவிற்கு முன்னாள் காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர் ராம அருணகிரி, தி.மு.க. மாவட்ட அவைத்தலைவர் கணேசன் ,ஒன்றிய செயலாளர் பூமிநாதன், பொதுக்குழு உறுப்பினர்கள் அம்பலமுத்து சோமசுந்தரம், நகரச் செயலாளர் கதிர்வேல், நகர அவைத் தலைவர் சிவக்குமார் , பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் இந்தியன் செந்தில் ஆகியோர் தலைமையில், சுற்றுச்சூழல் அணி மாவட்ட துணைத் தலைவர் ஆனந்த கிருஷ்ணன், அயலக அணி மாவட்ட துணை அமைப்பாளர் புகழேந்தி, ஒன்றிய துணை செயலாளர் சிவபுரிசேகர், நகர துணை செயலாளர் அலாவுதீன் உள்ளிட்டவர் முன்னிலையில் காலை 10:45 மணி அளவில் துவக்க விழா நடைபெற்றது .

நிகழ்ச்சியில் மாவட்ட பிரதிநிதிகள் தனுஷ்கோடி, செல்வகுமார், ஞானசேகரன், பூமிநாதன்,பிரதிநிதி குடோன்மணி, ஒன்றிய பொருளாளர் பாஸ்கரன் நகர பொருளாளர் செந்தில் கிருஷ்ணன்,முறையூர் ஊராட்சி மன்ற தலைவர் சுரேஷ், கல்லம்பட்டி ஊராட்சி மன்ற தலைவர் மெய்யப்பன்,நகர விவசாய அணி அமைப்பாளர் பரிஞ்சி சரவணன், நகர துணை செயலாளர் அலாவுதீன்,கவுன்சிலர்கள் ஜெயக்குமார், மீனா,மணி சேகரன்,சங்கர்,ஜெயசித்ரா தேவி,சத்யா,திவ்யா, தொழில் நுட்ப அணி மாடன் சையது,வர்த்தக அணி துணை அமைப்பாளர் பார்த்திபன், ஒன்றிய வர்த்தக அணி அமைப்பாளர் கே.ஆர்.ஏ. கணேசன்,கழக முன்னோடி எஸ். வி.மங்கலம் சுப மதியரசன், முரசொலி கார்த்திக், இளைஞர் அணி சேர்ந்த யுவராஜ் அம்பல முத்து,அருண்ராஜ் சிவபுரி சேகர், அமுதன், மணி, பேச்சாளர் உதயகுமார், பொன் சரவணன், அழகு ராஜா, தங்க குமரன், செல்வம், கனகராஜ், சுரேஷ், சசிகுமார், சாண்டில்யன், இளவரசன், சுந்தரபாண்டி, மணிகண்டன், நாகேந்திரன், கணேசமூர்த்தி, ஸ்டாலின் பிரபு, நவநீதன், தகவல் தொழில்நுட்ப அமைப்பாளர் அறிவு மற்றும் சிங்கம்புணரி ஒன்றிய நகர தி.மு.க. மற்றும் இளைஞரணி பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

---

# சிவகங்கை வருகை தந்த முதல்வருக்கு சிறப்பான வரவேற்பு!

## அமைச்சர் கே ஆர். பெரிய கருப்பன் தலைமையில். பல்லாயிரக்கணக்கில் பொதுமக்கள் திரண்டனர்!

சிவகங்கை, ஜன. 28 -

தமிழக முதல்வர் தளபதி மு. க .ஸ்டாலின் அவர்கள் அரசின் நலத்திட்ட பகுதிகள் செயல்படும் விதத்தினை ஒவ்வொரு மாவட்டமாக சென்று கள ஆய்வு செய்து வருகிறார். அதன்படி சிவகங்கை மாவட்டத்தில் 21 ,22 ஆகிய தேதிகளில் கள ஆய்வினை இரண்டு நாட்கள் மேற்கொண்டார் .

முதல் நாள் 21ஆம் தேதி நேற்று முன்தினம் காரைக்குடியில் அழகப்பா பல்கலைக்கழக வளாகத்தில் முன்னாள் ஒன்றிய நிதியமைச்சர் ப.சிதம்பரம் எம்பி குடும்பத்தினரால் கட்டப்பட்டுள்ள லட்சுமி வளர் தமிழ் நூலகத்தை திறந்து வைத்தும் பல்கலைக்கழகத்தில்அமைக்கப்பட்டுள்ள அய்யன் திருவள்ளுவர் சிலையை திறந்து வைத்தும் சிறப்புரையாற்றினார் .

மாலையில் காரைக்குடி பி.எல்.பி. பேலஸில் நடைபெற்ற கழக நிர்வாகிகள் கூட்டத்தில் கட்சியின் வளர்ச்சி பணிகள் குறித்து ஆலோசனை நடத்தினார். அதனைத் தொடர்ந்து நகராட்சி அலுவலகம் அருகில் உள்ள ஆதிதிராவிடர் விடுதிக்கு திடீரென்று சென்று ஆய்வு நடத்தினார் .இரவு காரைக்குடியில் தங்கினார் நேற்று .22 ஆம் தேதி புதன் கிழமை சிவகங்கையில் நடைபெறும் அரசு நிகழ்ச்சிக்காக காரைக்குடியிலிருந்து கார் மூலம் காலை 9 மணிக்கு கிளம்பினார்.

காரைக்குடியில் இருந்து கார் மூலம் சிவகங்கை செல்லும் வழியில் முதல்வர் குன்றக்குடி, திரு ப்பத்தூர், புறவழிச்சாலை , அரளிக்கோட்டை, ஒக்கூர் ,பெருமாள் பட்டி, சிவகங்கை நகர் வழியாக விழா நடைபெறும் சிவகங்கை மன்னர் துரைச்சிங்கம் கல்லூரி மைதானத்திற்கு சென்றார். முதல்வரை வழிநெடுகிலும் சாலையில் இருபக்கங்களும் ஏராளமான தி.மு.கவினர் ,கழக நிர்வாகிகள், பொதுமக்கள்,சமுக ஆர்வலர்கள் இருபுறமும் திரண்டு அன்புடன் வரவேற்றார்கள் குன்றக்குடியில் . மாவட்ட கழக செயலாளர் அமைச்சர்கேஆர். பெரியகருப்பன் தலைமையில் குன்றக்குடி ஒன்றிய செயலாளர்கள் நா. நெடுஞ்செழியன் குன்னக்குடி சுப்ரமணியன் முன்னிலையில் உற்சாகமான வரவேற்பு அளிக்கப்பட்டது. திருப்பத்தூர் புறவழிச்சாலையில் அமைச்சரும் மாவட்ட கழகசெயலாளரு மான கே ஆர் பெரிய கருப்பன் தலைமையில் பேரூர் கழகச் செயலாளர்கள் ஆர் .கார்த்திகேயன் ,கே.பி.எஸ். பழனியப்பன்,ஒன்றிய கழக செயலாளர்கள் எஸ். சண்முகவடிவேல் ,விராமதி மாணிக்கம் ஆகியோர் முன்னிலையில் சிறப்பான வரவேற்பு தரப்பட்டது.

அதனைத் தொடர்ந்து அமைச்சர் கே ஆர்.பெரியகருப்பன் ஊரான அரளிக்கோட் டைக்கு வருகைதந்த முதல்வருக்கு . அமைச்சரும் மாவட்ட கழக செயலாளருமான கே ஆர். பெரிய கருப்பன் தலைமையில் ஒன்றிய கழகச் செயலாளர்கள் கே.பாலசுப்ரமணியன் ,பூமணி பி.செல்வராஜ் துணை செயலாளர்கள் எஸ்.முத்துகுமார், சிவபுரிசேகர் ,பேரூர் கழக செயலாளர் கதிர்வேல் பேரூராட்சி மன்ற தலைவர் அம்பலமுத்து முன்னிலையில் அரளிக்கோட்டை கிராம மக்கள் சிறப்பான வரவேற்பு அளித்தார்கள். அரளிக்கோட்டை கருப்பன் கருப்பாயி அறக்கட்டளை சார்பில் சிலம்ப பள்ளி பயிற்சி மாணவர்கள் முதல்வர் முன் சாகசங்களை நடத்தி காட்டினார்கள். அவர்களை முதல்வர் பாராட்டினார்.. ஒக்கூரில் மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் கே-ஆர்.பெரியகருப்பன் தலைமையில் சிவகங்கை வடக்கு ஒன்றிய செயலாளர் திருமலை முத்துராமலிங்கம் முன்னிலையில் உற்சாகமான வரவேற்பு அளிக்கப்பட்டது . கிராமியமுறைப்படி இன்னிசை, ஆடல் பாடல் நிகழ்ச்சிகள் நடைபெற்றது.

அதை தொடர்ந்து சிவகங்கை தெற்கு ஒன்றியம் சார்பில் பெருமாள் பட்டியில் அமைச்சரும் மாவட்ட கழகச் செயலாளருமான கே ஆர் .பெரிய கருப்பன் தலைமையில் தெற்கு ஒன்றிய செயலாளர் எம் .ஜெயராமன் முன்னிலையில் சிறப்பான வரவேற்பு தரப்பட்டது. சிவகங்கை நகருக்கு வருகை தந்த முதல்வரை சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலக அரங்கில் திருப்பத்தூர் சாலையில் மாவட்ட கழக செயலாளர் அமைச்சர்கேஆர். பெரியகருப்பன் தலைமையில் நகர் கழகச் செயலாளர் சி.எம்.துரை. ஆனந்த்,முன்னிலையில் . முதல்வருக்கு சிவப்பு கம்பளம் விரித்து வரவேற்பு தரப்பட்டது . ஒயிலாட்டம், தப்பாட்டம், மயிலாட்டம், சிலம்பாட்டம் மற்றும் தாரை தப்பாட்டம் ,போன்ற கிராமிய கலைநிகழ்ச்சியுடன் சிறப்பான முறையில் வரவேற்பு தரப்பட்டது. பெண்கள் கிராமீய முறைப்படி குலவையிட்டும்,ஆரத்தி எடுத்தும் வரவேற்றார்கள்.சிவகங்கை மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று மாமன்னர் மருதுபாண்டியர்கள் சிலையை ஒரு கோடியில் திறந்து வைக்க உத்திரவிட்ட முதல்வரை வரவேற்கும் வகையில் மாமன்னர் மருதுபாண்டியர்கள் வேடமணிந்த இருவர் முதல்வரை வரவேற்றார்கள். அதனை தொடர்ந்து முதல்வர் சிவகங்கை மன்னர் அரசு துரைச்சிங்கம் கல்லூரிமைதானத் தில் காரைக் குடி செட்டிநாடு அரண்மனை வடிவத்துடன் பழமைகலைநயத்தடன் அழகாக அமைக்கப்பட்டுள்ள விழா மேடைக்கு சென்ற முதல்வருக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது .

முன்னதாக காவல் துறையின் அணிவகுப்பு மரியாதையை முதல்வர் ஏற்றார்.அதனைத்தொடர்ந்து விழா மேடையில் மாவட்ட ஆட்சியர் திருமதி ஆஷாஅஜித், மாவட்ட வருவாய் அலுவலர்மருத்துவர் செல்வ சுரபி, கோட்டாட்சியர் விஜயகுமார் வட்டாட்சியர் சிவராமன், ஆகியோர் சால்வை கொடுத்து வரவேற்றார்கள். விழா மேடையில் ஐம்பத்து மூன்றாயிரம் பேருக்கு பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். அதனைத் தொடர்ந்து விழா மேடையில் பாகனேரியை சேர்ந்த சுதந்திரப் போராட்ட வீரர் வாளுக்குவேலி அம்பலத்தின்சிலையினை திறந்து வைத்தும், சிவகங்கை மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான மாமன்னர் மருது பாண்டியர்கள் சகோதரர்கள் திருஉருவச்சிலை ருபாய் ஒரு கோடியில் அமைக்கப்படுவதற்கான அடிக்கல் நாட்டியும், சிவகங்கை பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான சீல்டு கால்வாய் விஸ்தரிப்பு திட்டத்திற்கும் மற்றும் பல்வேறு திட்ட பணிகளுக்கு காணொளி வாயிலாக அடிக்கல் நாட்டினார். இது தவிர முடிவுற்ற பணிகளை துவக்கி வைத்தும் ,புதிதாக திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டியும் விழா பேருரை ஆற்றினார்.

இந்த நிகழ்ச்சியில் அமைச்சர்கள் கேஆர்பெரியகருப்பன்,ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன்,கோவி.செழியன்,மு.பெ. சாமிநாதன், எம்.எல்.ஏக்கள் திருமதி தமிழரசிரவிக்குமார் ,எஸ். மாங்குடி,கார்த்திப.சிதம்பரம் எம்.பி. ஆகியோர் கலந்து கொண்டனர்.

---



தேனி வடக்கு மாவட்ட மருத்துவ அணி சார்பில் வடக்கு மாவட்ட மருத்துவ அணி அமைப்பாளர் டாக்டர் பாண்டியராஜ் ஏற்பாட்டில் கழக மாநில இளைஞரணி செயலாளர் , தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு இலவச மருத்துவ முகாம் தேவதானப்பட்டி தனியார் மண்டபத்தில் நடைபெற்றமுகாமை வடக்கு மாவட்ட செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் எம்.பி. துவக்கி வைத்தார். உடன் சரவணகுமார் எம்.எல்.ஏ., உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர் எல்.மூக்கையா, மாநில மருத்துவ அணி துணைச் செயலாளர் மன்சூர் அலிகான், வடக்கு மாவட்ட மருத்துவ அணி தலைவர் சுகன்யா அப்துல்சமது, மாவட்ட அவைத் தலைவர் பி.டி. செல்லபாண்டியன், மாவட்ட துணைச் செயலாளர்கள் செந்தில்முருகன், திருக்கண்ணன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் முருகேசன், பொதுக்குழு உறுப்பினர் ராஜா ரமேஷ், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் சுரேஷ், வடக்கு மாவட்ட சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு அமைப்பாளர் சேக்அப்துல்லா, ஒன்றியச் செயலாளர்கள் எல்.எம்.பாண்டியன், அய்யப்பன், கண்ணியாம்பட்டி முருகேசன், நகர செயலாளர் முகமது இலியாஸ், முன்னாள் பொதுக்குழு உறுப்பினர் ராமதாஸ், பேரூர் செயலாளர் திலகராஜா மற்றும் கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.



பொள்ளாச்சியில் கழக சட்டத்திட்ட திருத்தக் குழு சார்பில் மொழிப்போர்த் தியாகிகளுக்கு வீரவணக்கம் செலுத்தும் நிகழ்ச்சி நடைபெற்றது. கழக சட்டதிட்ட திருத்தக் குழு உறுப்பினர் தென்றல் செல்வராஜ் தலைமை வகித்தார். கழக தீர்மானக் குழு உறுப்பினர் ஜி.ஏ.அதிபதி, நகர மன்ற துணைத் தலைவர் எஸ்.கௌதமன், மாவட்ட விவசாயத் தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் பி.ஏ.செந்தில்குமார் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. கோவை தெற்கு மாவட்ட தி.மு.க. இளைஞரணி துணை அமைப்பாளர் மணிமாறன் தென்றல் வரவேற்றார். நிகழ்வில் மாவட்ட அவைத் தலைவர் மயூரா சுப்பிரமணியம் , தலைமை செயற்குழு உறுப்பினர்கள் மு.க.முத்து, எம்.அமுதபாரதி, பொள்ளாச்சி நகர செயலாளர் நவநீதகிருஷ்ணன், அய்யம்பாளையராசு, பாத்திமா அக்பர், மருதராஜ், ஜே.பி.ஆர் பாஸ்கர், செந்தில், ஈகா பொன்னுச்சாமி, திருமலை ராஜா, சித்ரகலா, கராத்தே ராஜா, மாணிக்கராஜ், வழக்கறிஞர் வி பி கிரி, அரவிந்த் வசந்த்ராம், சதீஷ் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.